நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 27    (09 - 06 - 1992)    செவ்வாய்க்கிழமை    ஓசை: 112

## தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தரநியமனம்

வடபகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் விரைவில் வழங்கப்பட உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முன்னதாக நேர்முகப்பரீட்சை வவுனியாவில் அல்லது கொழும்பில் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான இணக்கத்தை கல்விச்சேவைகள் ஆணைக்குழு தம்மைச் சந்தித்த தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளது. யாழ்.மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் தொண்டர் ஆசிரியர்சங்கங்களும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் கொழும்பு [4-ம் பக்கம் பார்க்க]

### (மணலாற்றில் கடும் சண்டை)

# ராணுவம் மீது புலிகள் எதிர்த்தாக்குதல்

# சிங்கள படையணிகளுக்கு பலத்த சேதம்

## பவல் கவச வாகனம் சிதறியது

அலம்பில் சந்தியில் இருந்து குமுழமுனை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது தங்கபுரம என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை நடத்தினர். பல மணி நேரம நீடித்த இவ் உக்கிர சண்டையில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. 'பவல்' கவச வாகனம ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் தங்கபுரத்தில் தரித்துள்ளனர்.

நேற்றுக் காலை அலம்பில் சந்தியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கவசவாகனங்கள சகிதம் குமுழமுனையை நோக்கி முன்னேறத் தொடங்கினர். இதேவேளை இராணுவத்தினருக்கு உதவி ...

...ருந்து மாலை 4.00 மணிவரையிலும் இச் சண்டை இடம் பெற்றது.

இச்சண்டையில் புலிகள்மேற்கொண்ட தாக்குதலினால் இராணுவத்தினருக்குப் பேரிழப்பு ஏற்பட்டது ஒரு 'பவல்' ...

இராணுவ தரப்பினர் தமக்கு மிகக்குறைந்த உயிரிழப்பே ஏற்பட்டதாகத் தெரிவித்தது. ஆனால் அனுராதபுர ஆஸ்பத்திரிக்குமட்டும் எட்டு இராணுவத்தினரின் சடலங்களும், பெரும் எண்ணிக்கையான ...

### வீரச்சாவு



## வவுனியா புகையிரதத்தில் கத்திமுனையில் கொள்ளை

[கொழும்பு]

கொழும்புக் கோட்டையில் இருந்து இரவு 11 மணிக்கு வவுனியா நோக்கிச் செல்லும் ரயிலில் பயணம்செய்யும் தமிழ் பயணிகளிடமிருந்து கத்தி முனையில் கொள்ளையடிக்கப் படுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதானையிலிருந்து கோட்டை ரயில் நிலையம் ... களுக்குள் புகும் கொள்ளையர்கள் கத்திமுனையில் பணம், நகைகளைக் கொள்ளையிடுகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இரவு ரயிலில் வவுனியாவிற்குச் செல்வதற்காகக் கோட்டை ரயில் நிலையத்திற்கு கடந்த சனி இரவு வந்த தமிழ்ப்பயணியிடம் இருந்து 96,000 ரூபாவினையும், 35,000 ரூபாபெறுமதியான தங்க நகைகளையும் இருவர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக அனுமதி 30 வீதம் அதிகரிப்பு

யாக, சிறிலங்கா விமானப் படை விமானங்களும் பலத்த குண்டு வீச்சுத்தாக்குதலை நடாத்தின. இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், இரண்டு அவ்ரோ விமானங்களும் இரண்டு உலங்கு வானூர்திகளும் தொடர்ந்து இடைவிடாது தாக்குதலை மேற்கொண்ட வண்ணமிருந்தன.

இந் நிலையில், முன்னேறி வந்த இராணுவத்தை அலம்பிலுக்கும், குமுழமுனைக்கும் இடையில் தங்கபுரம் என்னும் இடத்தில் எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். காலை 9.00 மணியிலி

கவச வாகனம் முற்றாக அழிக்கப்பட்டது.

இதேவேளை இம்மோதலை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா

காயமடைந்த இராணுவத்தினரும் கொண்டுவரப்பட்டதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

## தெல்லிப்பழைப் பகுதி பரிச்சயமில்லையாம்

தெல்லிப்பழைப் பகுதி இராணுவத்தினருக்குப் பரிச்சயமில்லாத புதிய பிரதேசமாக இருப்பதனால் தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடுபட முடியாதிருக்கின்றது என கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் முனசிங்கா தெரிவித்தார். மேலும் அவர், வடபகுதியில் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

தாக்குதல்களின் போது பொதுமக்களுக்கு எதுவித பாதிப்பு இல்லை என்றும், புலிகள் இருக்குமிடங்களைவிட்டுவிலகி

(4ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையின் தாக்குதலுக்கு 2 மீனவர் பலி; இருவர் காயம்

### யாழ். குடா கடலில் சம்பவம்

(குருநகர்)

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குடாக் கடல் பிரதேசத்திற்கு உறென்று வந்து சேர்ந்த சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கிப படகில் வந்தவர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்தனர். இருவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

ஒரு பிளாஷ்ரிக் படகு கரை வந்தது. மற்றொன்று வலைகளுடன் கடலில் கைவிடப்பட்டது. காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த அருளப்பு பிறையினர், மயிலிட்டியில் இருந்துமண்டைதீவுக்கு இடம்பெயர்ந்து அங்கிருந்து பரசையூரில் தஞ்சமடைந்திருந்த மரியாம்பிள்ளை மரியநாயகம் ஆகியோரது மீன்பிடிவள்ளங்களே தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சம்பவத்தில் மரியாம்பிள்ளை மரியநாயகம் (வயது 40) குருநகரைச் சேர்ந்த ஐயாத்துரை யேசுதாஸன் [சின்னவன் வயது 21] ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

மண்டைதீவைச் சேர்ந்த மரியநாயகம் ரமேஷ் (இவர் இறந்தவரின் மகன் வயது 14), அருளானந்தம் இருதயராசா [வயது 33] ஆகியோர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இச் செய்தி எழுதப்படும் வரை இறந்தவர்களின் சடலங்கள் கரை ஒதுங்கவோ உறவினர்களால் தேடப்பட்டு மீட்கப் பட்டதாகவோ தகவல் எதுவும் கிடைக்கவில்லை

(88,21)

### வெளிச்சமில்லாது வந்த

## கடற்படை விசைப்படகு துப்பாக்கிச் சூடு நடாத்தியது

(குருநகர்)

''வெளிச்சம் எதுவும் இல்லாமல் கடற்படை விசைப் படகொன்று எமது வள்ளத்துக்கு அருகில் வந்து நின்றதும் நானும் மற்றொரு தொழிலாளியான கிறேசியன் ஜெம்மார் (வயது 22) ஆகியோர் கடலில் பாய்ந்தோம். ஐயாத்துரை யேசுதாசன் (வயது 21) வள்ளத்தில் நின்றார். நாம் கடலில் பாய்ந்ததும் விசைப் படகிலிருந்து வெளிச்சம் பரவியது.''

நேற்று முன்தினம் (7-6-92) யாழ்-குடாக் கடலில் வைத்து

4ஆம் பக்கம் பார்க்க)

### காரைநகர் கடல் பகுதியில்

## இரண்டு கடற்தொழிலாளர் இராணுவத்தால் கைது

காரைநகர் கடல்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இரண்டு கடற்தொழிலாளர்களை சிறிலங்கா இராணுவத்தினரால்பிடித்துச்செல்லபட்டுள்ளனர். இவர்களது வள்ளத்தையும் காரைநகரிலிருந்து வந்த இராணுவத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிறு காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில காரைநகரைச் சேர்ந்த வ.நல்லையா. த. தங்கப்பா என்பவர்களே இராணுவத்தினரால் பிடித்துச்செல்லப்பட்டவர்களாவர்.

### தவறு

01.06.1992 அன்று அலம்பிலில் நடைபெற்ற மோதலில் 2ஆம் லெப்டினன் குமுதன் (தம்பிமுத்து பேரின்பம் மாணிக்கமடு, இறக்காமம், அம்பாறை) என்னும்போராளி வீரச்சாவு அடைந்ததாக வெளி வந்தசெய்தி தவறானதாகும்.

வீரவேங்கை வெங்கடேஸ்வரன்



வீரவேங்கை றொபேட்



வீரவேங்கை செல்வகுமார்

08-06-92 அன்று அலம்பில் சந்தியிலிருந்து அலம்பில் நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான ஏழு மணிநேர மோதலில் 'பவல்' கவச வாகனம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது

இத்தாக்குதலில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை வெங்கடேஸ்வரன் [பாஸ்கரன்- முருகையா சிவகுரு, நிவியமோட்டை, மன்னார் வீதி, வவுனியா].

வீரவேங்கை றொபேட் [இராசநாயகம் இளம்தீபன், இல. 392, 4-ம் யுனிற், மல்லாவி].

(4ஆம் பக்கம் பார்க்க)

வரும் இந்தரயிலின் என்ஜினை மறுமுனையில் பூட்டுவதற்காக என்ஜின் தனியாகக் கழன்று செல்லும்போது பெட்டிகளுக்குள் மின்சாரம் அணைந்து விடும். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயணிகள்பெட்டி

(கொழும்பு)

புதிய திட்டத்தின்படி இவ்வாண்டு (1991-92) பல்கலைக்கழக அனுமதிக்கு 30 வீதம் கூடுதல் மாணவர்களை அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இதன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு பகிஷ்கரிப்பு தற்காலிகமானதே

### -அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழுவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்காலிகமாகவே பகிஷ்கரித்தது என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினை தொடர்ந்து நீடிக்க முடியாது என்றும், இனப் பிரச்சினை தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவை தற்காலிகமாகவே பகிஷ்கரித்தது என்றும் அநுரா தெரிவித்தார்.

### அமைச்சர் வழங்கிய

## இனிப்பு பார்சலை வீசி எறிந்தார் ஹேமா

(வவுனியா)

தமிழ்க் குழந்தைகளுக்கு வழங்க என சிறிலங்கா கல்வி ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரனால் ஹேமா பிரேமதாசாவிடம் வழங்கப்பட்ட இனிப்புக்களை ஹேமா அலட்சியமாக வீசியதாக தெரியவருகிறது.

கடந்த மாதம் 29ஆம் திகதி வவுனியாவுக்கு வந்த சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா புலேந்தரன் ஞாபகார்த்தமாக மணிக்கூட்டு கோபுரமொன்றை திறந்துவைத்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## 100 முஸ்லிம் குடும்பங்கள் குச்சவெளியில் குடியேற்றம்

[திருக்கோணமலை]

குச்சவெளிப்பகுதியில் நூறு முஸ்லிம் குடும்பங்களைநாளை முதல் குடியமர்த்த உள்ளதாக குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இப்பகுதியில் குடியேற்றப்பட்ட 100 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் விவசாயத்தில் ஈடுபட விருப்போருக்கு ஒக்ஸ்பாம் நிறுவனம் உதவி வழங்க இருப்பதாகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



லெப். தமிழன்



2 ஆம் லெப். அறிவொளி

07-06 92 அன்று காலை 7 மணியளவில் கட்டுவன் பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# வீரமுனை கிராமத்தில் தமிழர் பலாத்காரமாக குடியேற்றம்

(அம்பாறை)

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சிறிலங்கா அரசு மேற்கொண்டுவரும் தீவிர சிங்களக் குடியேற்றங்களை வெளியுலகத்தின் கவனத்திலிருந்து திசைதிருப்ப சிறிலங்கா அரசினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் அம்பாறை வீரமுனையில் மீண்டும் 100 தமிழ் குடும்பங்கள் சிறிலங்கா படையினரால் பலாத்காரமாக கொண்டு செல்லப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளனர்

1990 ஆம் ஆண்டு இராணுவத்தினர் நடாத்திய வன்முறைகளின் விளைவாக வீரமுனையில் வாழ்ந்துவந்த 500 க்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்தனர். இராணுவ வன்முறைகளினால் அங்கு வாழ்ந்த மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தனர்.

ஆரம்பத்தில் கால்நடைகளுக்கென அமைக்கப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## லக்ஸ்பிறே பால் மாவில் பன்றிக் கொழுப்பு இல்லை

லக்ஸ்பிறே பால் மாவில் பன்றிக் கொழுப்பு இல்லையென்று லங்கா மில்க் பூட்ஸ் விற்பனை பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

ஒரு பால்மாவில் பன்றிக் கொழுப்பு இருப்பதாக பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டது தொடர்பாக தான் இதனைத் தெரிவிப்பதாகவும்,

லக்ஸ்பிறே ஐக்கியஇராச்சிய வேல்ஸ் என்ற இடத்திலுள்ள பால் விற்பனை சபையிடம் இருந்து பெறப்படுகிறது என்றும், லங்கா மில்க் பூட்ஸ் சுத்திகரித்துக் கொடுக்கும் பால் மா நூறு சதவீத மாட்டுப் பால் என்றும், வெண்ணெய் இயற்கையாக வரும் கொழுப்பை விட வேறு பொருள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.'

## சுதந்திர வர்த்தக வலயம்; தொழிலாளர்வேலை நீக்கம்

கொழும்பு சுதந்திரவர்த்தக வலயத்தில் கடமையாற்றும் தொழிலாளர்கள் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டமையால் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

சுமார் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இவ்வாறு வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

## ஊனமுற்ற பெண்களுக்கு தொழிற்பயிற்சி

(கொழும்புத்துறை)

யாழ். ஊனமுற்ற பெண்களுக்குப் பலவேறு தொழில் பயிற்சிகளையும் பயிற்சித் திட்டங்களையும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் நடாத்திவருகின்றது. தற்போது யாழ். கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள பணிமனைத் தொழிலகத்தில் ஊனமுற்றவர்களுக்கான தையல் பயிற்சி வகுப்பு நடைபெற்றுவருகின்றது.

ஊனமுற்றோர் பயிற்சி பெறும் வரை தங்குவதற்கான விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுளளதென்றும் அத்துடன் வறுமைப்பட்ட பெண்கள் தினமும் தையல் பயிற்சி பெற்றுச் செல்லவும் வசதி செய்யப்பட்டுள்ளதென்றும் இப் பயிற்சிவகுப்புஇலவசமாகவே நடத்தப்பட்டு வருவதாகவும் சங்கப் பொருளாளர் திருமதி ஜே எம். சி. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

## சிறப்பாக நடைபெற்ற தீவக கலைவிழா

(புங்குடுதீவு)

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக தீவகப் பிரிவினரின் "கலைவிழா" 18-06-92 ஞாயிற்றுக்கிழமை [நேற்று முன் தினம்) இரவு அரங்கை திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது. கலை பண்பாட்டுக்கழக தீவகப் பொறுப்பாளர் திரு குமணன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் விடுதலைப்புலிகளின் முக்கியபிரமுகர்களான திரு. யோகரெத்தினம் யோகி கலை பண்பாட்டுக்கழக உதவிப் பொறுப்பாளர் திரு. தேவர்; தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன், கலை பண்பாட்டுக்கழக தீவக உறுப்பினர் திரு. ஐ. சிவசாமி ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினார்கள் கலை,பண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு. சிட்டு வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து தீவக கலைஞர்களின் பலகலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பெருந்திரளான மக்கள் மேற்படி விழாவைக் கண்டுகளித்தனர். (22)

## தீவுப் பகுதியிலிருந்து நோயாளிகள் வருகை

தீவுப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண் நோயாளிகள் கடற்படை கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்பட்டு அங்கிருந்து குமண கப்பல் மூலம் பருத்தித்துறை ஊடாக யாழ். வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டனர்.

கா.கனகமணி, கா.ரேணுகா ஆகிய இரண்டு பெண்களே வந்து சேர்ந்தனர். (82)

## அவுஸ்திரேலியாவின் ஏற்பாட்டில் 'எயிட்ஸ்' பரவலைத் தடுக்க மருத்துவப் பயிற்சி நெறி

(கொழும்பு)

ஆசியாவில் அண்மைக்காலங்களில் 'எயிட்ஸ்' நோய் அதிவேகமாக பரவுகின்ற அச்ச நிலை தொடர்பாகவும் நோய் பரவுவதற்கான எச் ஐ. வி. வைரசுகளைத் தடுப்பதற்காகவும் அவுஸ்திரேலிய சுகாதாரப் பிரிவு ஆசிய நாடுகளை அங்கத்துவம் கொண்ட மருத்துவப் பயிற்சி நெறி ஒன்றினை நிகழ்த்தியது.

வைத்திய நிபுணர்கள், மருத்துவ நிர்வாகிகள், மருத்துவ ஆலோசகர்கள் இணைந்த மேற்படி பயிற்சிநெறி சிட்னி நகரில் நடைபெற்றது இங்கு எம். ஐ வி. வைரசுகளுக்கான குறுகிய மருத்துவ ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இம் மருத்துவ ஆய்வில் இந்தோனேஷியா, மலேஷியா, பாகிஸ்தான், பிலிப்பைனஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்வான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஆசிய நாடுகள் பயிற்சிக் களங்களின் மூலம் கல்வியினாலும், பாதுகாப்பு நிவாரணிகளாலும் எயிட்ஸ் தடுப்புகளுக்கு வழி வகுத்து வருகிறது.

ஆசிய வைத்தியர்களின் பயிற்சிகளை பிரபல 'பிரிஸ்டல் மேயர்ஸ் ஸ்குவிப் கம்பனி'' பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் இக்கம்பனி ஆசியாவில் எச். ஐ வி. வைரஸ்களை ஒழிப்பதற்கான மருத்துவ வசதிகளையும் வழங்க முன்வந்துள்ளது.

எச். ஐ வி. வைரஸ்தொடர்பான விபரங்களை அறிந்து கொள்வதற்கும் அவுஸ்திரேலிய வைத்தியர்கள் பலரும் இவ்ஆய்வினை மேற்கொள்ளும் நியூ சவுதவேல்ஸ் சௌக்கிய பிரிவுடன்ஆய்வுகளில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

சிட்னி செண்ட் வின்செண்ட் வைத்தியசாலையில் நிர்வாகியும் எச். ஐ வி. வைரஸ் ஒழிப்புக்குழுவின் தலைவருமான கலாநிதி றோனோல்ட் பெனி வைரஸ் ஒழிப்புக்கான சவால்களைநோயாளிகள் மட்டில் ஏற்கவும் மருத்துவ முயற்சிகள் ஒத்துழைப்பை நல்கி வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் மருத்துவ அறிவையும் சிகிச்சைகளையும் விட எச். ஐ வி. வைரஸ்களின் சமூகத் தொடர்பு மருத்துவ தொடர்புகளை அறிந்து கொள்ள முக்கியம் என்பதுடன் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகியுள்ள இந்த முயற்சி வெற்றிகரமாக ஆசிய நாடுகளிலும் தொடர்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## அலுவலக இடமாற்றம்

(கொழும்புத்துறை)

தெல்லிப்பளை பிரதேச சபை(உ.அ. பணிமனை) பிரிவுஅலுவலகம் உடுவிலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

துர்க்காதேவி ஆலயத்தில் இயங்கிவந்த காங்கேசன்துறை தெல்லிப்பளை தபால் அலுவலகங்களும் விரைவில் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக தெரியவருகிறது. (24)

## திறப்பு விழாவும் பொதுக்கூட்டமும்

[கொழும்புத்துறை]

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தினால் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய இடங்களை உள்ளடக்கிய தென்மராட்சிக்கிளை அலுவலகத்திறப்பு விழாவும், பொதுக்கூட்டமும் இம்மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கண்டி வீதி

## அமுதப்பிரியா நினைவாக முதலுதவிசிகிச்சைநிலையம்

[புங்குடுதீவு]

நாவற்குழியில 'லவனிதா' குடியேற்றத் திட்டத்தில வசிக்கும் மக்களின் நன்மை கருதி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் தீவகப் பிரிவினரால் வீரவேங்கை அமுதப்பிரியா (அகிலகுமாரி பரமலிங்கம்) அவர்களின் ஞாபகார்த்தமாக 'முதலுதவி சிகிச்சை நிலையம்' ஒன்று சென்ற மாதம் 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் தீவகப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி அவர்களினால் திறந்து வைக்கப்பட்ட மேற்படி நிலையத்தில் தற்போது மூப்பதிற்கும் மேற்பட்ட தொண்டர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தினமும் காலை 8 00 மணி தொடக்கம் நண்பகல் 11 00 மணி வரையும், பிற்பகல் 2 00மணி தொடக்கம் மாலை 5 00 மணி வரையும் இந்த முதலுதவி சிகிச்சை நிலையம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. [22]

## 'சேது நூலகம்'

(புங்குடுதீவு)

தீவக மக்கள் தங்கியிருக்கும் அராலி முகாமில் 1991ஆம் ஆண்டு சித்திரை மாதம் காரைநகரில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை சேது [வீரசிங்கம் கிருபாகரன்) அவர்களின் ஞாபகார்த்தமாக 'சேது நூலகம்' எனும் பெய

## உலக சனத்தொகை

## இருபத்தியெட்டு வருடத்தில் 52 வீதமாக அதிகரிக்கலாம்

[கொழும்பு]

எதிர்வரும் இருபத்தியெட்டு வருட காலத்தில் உலக சனத்தொகை ஐம்பத்தியிரண்டு வீதம் அதிகரிக்கலாம் எனவும் 2020ஆம் ஆண்டளவில்

1.2 பில்லியன், 870 மில்லியன் இந்தியா, சோவியத் ரஷ்யா 293 மில்லியன், ஐக்கிய அமெரிக்கா 253 மில்லியன் தொகையைக் கொண்டதாக புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## வருடாந்த பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள் மிகு வீரபத்திர ஆலய ஆங்கிரச ஆண்டுக்கான வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பமாகி அடுத்தநாள் சனிக்கிழமை அபிசேக ஆராதனையுடன் நிறைவு பெறும்.

## வரி விளம்பரம்


**சங்கீதம்**

சங்கீதம்வினாவிடை கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், திநேஷ்,பாலாஜி.மண்டேலா, மாசமிலன், ஞானசுரபி ஆல் சிலோன். சோபிதா, அறிவாலயம், பிரசாந்தி, வாலம்பிகா, ஸ்ரீலங்கா, சுடபிரமணியம், ஸ்ரீகாந்த். ஸ்ரீ [illegible], நடுவுத்துருத்தி. ( 2648 )


## சிறுநீரகத்தில் கற்களை அகற்றுவதற்கு அதிர்வலை மூலம் சிகிச்சை

[கொழும்பு]

சிறுநீரகக் கற்களை அதிர்வலைகள் மூலம் அகற்றுவது நேற்று முதல் தடவையாகக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது லித்றோ ரிப்டர் இயந்திரமொன்றின் மூலம் இச்சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் மூலம் வெளியேற்றப்படும் அதிர்வலைகள் இக்கற்களை உடைத்தெறிகின்றன.

ஜேர்மன் அரசு இத்தகைய இரண்டு இயந்திரங்களை வழங்கியுள்ளது ஒவ்வொரு இயந்திரமும் 5 கோடி' 50 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்ததாகும். நோயாளி ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கச் சுமார் 300 அதிர்வலைகள் போதுமானவை. சுமார் 30 நிமிடங்களில் சிகிச்சை முடிவடைந்து விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நாய்களுக்கு ஊசி

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் எதிர்வரும் 10ஆம், 11ஆம் 12ஆம் திகதிகளில் நாய்களுக்கான தடுப்பூசி மருந்து விசர்நாய்த் தடுப்பூசி) அவ்வவ் பகுதி சனசமூக நிலையங்களில் ஏற்றப்படவுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

ஆகவே பொதுமக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்குரிய தடுப்பூசியை போடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலர் உணவு விநியோகம்

[புங்குடுதீவு]

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தீவக மக்களுக்கு அரிசி மாவு, சீனி, பருப்பு ஆகிய உலர் உணவுப் பொருட்களை யாழ் அடைக்கல மாதா தேவாலயத்தில் வைத்து சில தினங்களாக வழங்கப்பட்டது. இலவசமாக வழங்கப்பட்ட இவ் உணவுப் பொருட்களைப் பெருந்தொகையான தீவக மக்கள் பெற்றுச் சென்றனர். [22]

## விண்ணப்ப திகதி மேலும் நீடிப்பு

யாழ்பல்கலைக்கழக வெளிவாரி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் அனுப்புந் திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிமாவட்ட மாணவர்களுக்கும் வசதியளிக்கும் முகமாகவும், பதிவு செய்யும் மாணவர்களின் தொகையை அதிகரிக்கவுமே அடுத்த மாதம்4 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது. [05]

18-06-92 ஞாயிற்றுக்கிழமை (நேற்று முன் தினம்) இரவு அரங்கை திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது. கலை பண்பாட்டுக் கழக தீவகப் பொறுப்பாளர் திரு குமணன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் விடுதலைப்புலிகளின் முக்கியபிரமுகர்களான திரு. யோகரெத்தினம் யோகி கலை பண்பாட்டுக்கழக உதவிப் பொறுப்பாளர் திரு. தேவர்; தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன், கலை பண்பாட்டுக் கழக தீவக உறுப்பினர் திரு. ஐ. சிவசாமி ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினார்கள் கலை,பண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு. இட்டு வரவேற்புரை

படி விழாவைக் கண்டுகளித்தனர். (22)

## தீவுப் பகுதியிலிருந்து நோயாளிகள் வருகை

தீவுப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண் நோயாளிகள் கடற்படை கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்பட்டு அங்கிருந்து குமண கப்பல் மூலம் பருத்தித்துறை ஊடாக யாழ். வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டனர்.

கா.கனகமணி, கா.ரேணுகா ஆகிய இரண்டு பெண்களே வந்து சேர்ந்தனர். (82)

லகங்களும் விரைவில் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக தெரியவருகிறது. (24)

## திறப்பு விழாவும் பொதுக்கூட்டமும்

[கொழும்புத்துறை]

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தினால் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய இடங்களை உள்ளடக்கிய தென்மராட்சிக்கிளை அலுவலகத்திறப்பு விழாவும், பொதுக்கூட்டமும் இம்மாதம் 14ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கண்டி வீதியில் காலை பத்து மணிக்கு வர்த்தக ஊழியர் சங்கங்களை அலுவலகம் திறந்து வைக்கப் படும். பிற்பகல் 2 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

இந்த இருவைபவங்களிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் பலர் சிறப்பு அருந்தினர்களாகக் கலந்து கொள்ளுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

...சிகிச்சை நிலையம்' ஒன்று சென்ற மாதம் 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் தீவகப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி அவர்களினால் திறந்து வைக்...

## 'சேது நூலகம்'

(புங்குடுதீவு)

தீவக மக்கள் தங்கியிருக்கும் அராலி முகாமில் 1991ஆம் ஆண்டு சித்திரை மாதம் காரைநகரில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை சேது (வீரசிங்கம் கிருபாகரன்) அவர்களின் ஞாபகார்த்தமாக 'சேது படிப்பகம்' எனும் பெயரில நூலகம் ஒன்று கடந்த மாதம திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் தீவகப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி அவர்களினால் திறந்துவைக்கப்பட்ட இந்த நூலகத்தினால் அப்பகுதியில் தங்கியுள்ள தீவக மக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். (22)

5.00 மணி வரையும் இந்த முதலுதவி சிகிச்சை நிலையம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. [22]

...கள் பன்றிப்பு நாய்களுக்குரிய தடுப்பூசியை போடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

...விக்கப்பட்ட இவ் உணவுப் பொருள்களைப் பெருந்தொகையான தீவக மக்கள் பெற்றுச் சென்றனர். [22]

உலக சனத்தொகை

## இருபத்தியெட்டு வருடத்தில் 52 வீதமாக அதிகரிக்கலாம்

[கொழும்பு]

எதிர்வரும் இருபத்தியெட்டு வருட காலத்தில் உலக சனத்தொகை ஐம்பத்திரண்டு வீதம் அதிகரிக்கலாம் எனவும் 2020 ஆம் ஆண்டளவில் 8.2 பில்லியன் தொகையாக இருக்கும் எனவும் சமீபத்தில் வெளியாகிய புள்ளி விபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

1991 ஆம் ஆண்டு உலக சனத்தொகை 5 4 பில்லியன் ஆகும். உலக சனத்தொகையில் சீனா முதலிடத்தையும் 1.2 பில்லியன், 870 மில்லியன் இந்தியா, சோவியத் ரஷ்யா 293 மில்லியன், ஐக்கிய அமெரிக்கா 253 மில்லியன் தொகையைக் கொண்டதாக புள்ளிவிபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## விண்ணப்ப திகதி மேலும் நீடிப்பு

யாழ்பல்கலைக்கழக வெளிவாரி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் அனுப்பும் திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிமாவட்ட மாணவர்களுக்கும் வசதியளிக்கும் முகமாகவும், பதிவு செய்யும் மாணவர்களின் தேவையை அதிகரிக்கவுமே அடுத்த மாதம்4 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது. [05]


அழகுமிகு அச்சுவேலைகள் துரித கதியில் செய்து கொள்ள

**நியூ ஈரா பப்ளிகேஷன்**

267, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 — 01 — 1921

மறைவு 09 — 05 — 1992

**கனகசபை செல்லையா**

அம்மி வைத்தான் - வைத்தியர்

நீ— இல்லை......
இங்கே... நிலவே இறந்துவிட்டது!
அன்பின் தந்தையே
உன் மரணம்
கண்ணீரைக் கசிய வைக்கிறதே.

உன் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மற்றும்
உறவினர்கள்

செல்லையா கனகசபை
செல்லையா பாக்கியநாதன்
வவுனியா

(சி/4498)

## இதயங்கனிந்த அஞ்சலிப்பூக்கள்

2-ம் ஆண்டின் நினைவில்

வீரஜனனம் 30-09-1965

வீரமரணம்; 02-09-1990



கடற்புலி கப்டன
மோகன் மேத்திரி
(காசிநாதன் நகுலேஸ்வரன்)

பொருளுடன் வருகையில் படையினர் நெருங்கிட
படகுடன் தன்னை எரித்து ஒளிர்ந்து
கடலிலே கரைந்து காவியம் படைதத
கடற்புலி கப்டன் மோகன் இவனே

1-ம் ஆண்டின் நினைவில்

அன்னை மிமடியில் 16-11-1970

ஆண்டவன் அடியில் 24-05-1991



செயழின் / குமார்
(காசிநாதன் யோகேஸ்வரன்)
திதி : 10 - 06 - 1992

இன விடுதலை வேண்டி நின்றவன்
மன மொருநிலை குழம்பிப் போயினன்
வெடியினுகவே தன்னை யழித்து
உடன் மறைந்த யோகேஸ் இவனே

எங்களை விட்டுப் பிரிந்து இறைவன் தாள் சேர்ந்த
இவ்விரு கண்மணிகளின் ஆதமா சாந்தியடைய பிரார்த்திக்கும்

நகுலேஸ்வரன் வீதி,
நெடியகாடு, வல்வெட்டித்துறை

பெற்றோர், சகோதரி, மைத்துனர்
சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்

(263

## நினைவு கூருகின்றோம்...

## 1992-06-09

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் பன்னாலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு புன்னாலைக் கட்டுவனில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**கலீல்** (இரத்தினசிங்கம் கலியுகன் - ஈவினை, புன்னாலைக்கட்டுவன் )

**வினோதன்** (மார்க்கண்டு பற்பராசா - குப்பிளான்)

1989 ஆம் ஆண்டு புங்குடுதீவில் தேசவிரோத சக்திகளினால் சுடடுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**இ. சதாசிவம்**

யாழ் மத்தியூஸ் வீதியில் தேசவிரோத சக்திகளினால் சுடடுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (பருத்தித்துறை) எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எம்மைப் பிரிந்த -

**2-ம் லெப். சோகின்** (சதாசிவம் நடராசா - மட்டக்களப்பு)

**2-ம் லெப். ரவி** (சபாபதி தயாபரன் - மட்டக்களப்பு)

**லெப். கேணல் டேவிட்** (கிறிஸ்தோப்பர் அன்ரனி மரியதாஸ் - பாலாவிக் குடியேற்றம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை )

**லெப். ரமணன்** (பாண்டியன் சுந்தரதாஸ் - திருக்கோணமலை)

**லெப். கரிகாலன்** (சிதம்பரப்பிள்ளை சுரேஷ் - வரணி வடக்கு)

**2-ம் லெப் மாணிக்கம்** சண்முகநாதன் கஜேந்திரன் - மூளாய் வீதி, வடடுக்கோட்டை.)

**புலவர்** (சிறி ஆனந்தகுரு சியாமளன் - வல்வெட்டித்துறை)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினா மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட - களுவாஞ்சி கேணி 2 ஐச் சேர்ந்த சிறுவன், இளைஞன் ஆகிய 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4522)

## சிந்தனைக்கு

ஆற்றலைக் காட்டிலும், மிக உயர்வானதும், அருமையானதும் காண்பதற்கு அரிதானதும் ஒன்று உண்டு அதுதான் ஆற்றலை இனம் கண்டு போற்றும் ஆற்றல்

— எல்பெர்ட் ஹர்பர்ட்

ஈழநாதம்

81, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் 09-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
இ. லெ. எண் 65

# பற்றுக் கோடாய் தெரிவுக் குழு

தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவை மீண்டும் செயற்பட வைக்க தீவிரமான முயற்சிகளை அரசாங்க தரப்பு எடுத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைய காரணமாக இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவைப் பகிஷ்கரிப்பதான தமது திட்டத்தை மறுபரிசீலனை செய்து வருவதாகவும் தெரியவருகின்றது. அத்தோடு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடு ஸ்தம்பிதம் அடைந்ததால் பெரும் கவலை அடைந்துள்ள கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களும் இது குறித்து தீவிர அக்கறை காட்டிவருகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திபாவது பாராளுமன்றத் தெரிவுக்குழுவை இயங்கவைக்க அவை முயற்சிக்கின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை கூட்டுவதற்கு இவ்வளவு தீவிரமான முயற்சி செய்யும் எந்த கட்சிக்கும் அல்லது குழுக்களுக்கும் இனப்பிரச்சினையை பாராளுமன்றக் தெரிவுக்குழுவின் சிபார்சுகள் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை இவர்களின் இந்த நடவடிக்கையினம் இன்றுள்ள யதார்த்த நிலையினால் உருவாகியுள்ளது என்றாலும் தப்பில்லை.

இன்றுள்ள யதார்த்த சூழ்நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு அரசியல் அலகாக ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்திலேயே இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து மேலும் பேச்சுவார்த்தை நடத்தக் கூடியதாகவும் அவை ஓர் தீர்வை நோக்கி முன்னேறக் கூடியவையாகவும் இருக்கும் ஆனால் பிரதான சிங்களக்கட்சிகளோ பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஓர் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை. அதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு அரசியல் அலகாக செயற்படுவதை தாம் எதிர்க்கப் போவதாகவும் பகிரங்கமாக அறிவித்துள்ளன.

இந் நிலையில் சமரசம் செய்து வைக்க முடியாத இரு விடயங்களுக்கு மத்தியில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் எவ்வாறு சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத்திட்டத்தை முன்வைக்க முடியும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும் பெரும்பான்மையினர் சிங்களவராக இருப்பதனால் தீர்வுத்திட்டமும் சிங்களவரி...

# அமெரிக்காவை அதிர வைக்கும் சீனாவின் அணுப் பரிசோதனைகள்

கடந்த மே மாதம் 21ஆம் திகதியன்று நிலத்திற் கடியிலான பாரிய அணு குண்டுப் பரிசோதனை ஒன்றை சீனா நடத்தியது. இந்தப் பரிசோதனையின் போது ஒரு மெகா தொன் எடையுள்ள அணு குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. இதுவே சீனா நடத்திய அணுப் பரிசோதனைகளில் மிகப் பெரியது ஆகும்

ரஷ்யாவோ, பிரான்சோ, பிரிட்டனோ இதுவரை இத்தகைய பெரிய அணுப்பரிசோதனை ஒன்றை நடத்தியிருக்கவில்லை என்பதும், அந் நாடுகள் மேற்கொண்ட சோதனைகளை விட இது ஆறு மடங்கு பெரியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சீனாவின் இந்தப் பரிசோதனையை மிகவும் கண்டித்துள்ள அமெரிக்கா பொருத்தமற்ற வேளையில் இத்தகைய பரிசோதனையைச் சீனா ஏன் மேற்கொண்டது எனவும் வினா எழுப்பியுள்ளது.

ஆனால் நிலத்திற்கு அடியிலான அணுப்பரிசோதனையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ள சீனா அமெரிக்காவின் கண்டனங்களையும், குற்றச் சாட்டுகளையும் நிராகரித்துள்ளது அத்துடன் இன்னும் பல பரிசோதனைகளை சீனா நடத்தும் என்றும் அறிவித்துள்ளது. மேலும் இது பற்றி கருத்து வெளியிட்ட சீனா வெளியுறவு அமைச்சர் வு ஜியான் மின் 1974-ல் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் சீனாவும் நடந்து கொள்ள வேண்டும் என்று சீனாவை வற்புறுத்தும் உரிமை எதுவும் அமெரிக்காவிற்கு இடையாது எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை உலகில் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சீனாதான் குறைந்தளவு அணுப் பரிசோதனைகளை நடத்தியிருப்பதாக உலக ஆயுதக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தலைவர் ஜாக் மென்டெல் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் அமெரிக்கா வருடமொன்றிற்கு சராசரியாக 12 முதல் 24 வரை அணுப்பரிசோதனைகளை நிகழ்த்தி வருகின்றது எனக் குறிப்பிட்டார். 1971 ஆம் ஆண்டு நவம்பர் ஆறாம் திகதி அலஸ்காப் பாலைவனத்தின் நிலத்திற்கு அடியில் அமெரிக்கா மேற்கொண்ட ஐந்து மெகா தொன் அணுப் பரிசோதனையே உலகில் மிகப் பெரியதாகும் இதில் ஒரு மெகா தொன் என்பது பத்துலட்சம் தொன்னுக்குச் சமன் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா இதுவரையில் எண்ணூறு அணுப் பரிசோதனைகளை நடத்தியுள்ளது. ஆனால் சீனா முப்பத்தொன்பது சோதனைகளை மட்டுமே நடத்தியுள்ளது எனவும் திரு ஜாக் மென்டெல் தெரிவித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க அணுப் பரிசோதனை முயற்சிகளைக் குறைக்க அமெரிக்கா முயற்சி எடுத்து வருகின்றது என வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை கடந்த மே 25-ம் திகதி வெளியிட்ட செய்தியை வெள்ளை மாளிகை அதிகாரிகள் மறுத்துள்ளனர். அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சரான டிக் செனி இது முற்றிலும் ஆதாரமற்றதொன்று என வர்ணித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், சீனா தனது அணுப் பரிசோதனைகளை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா கேட்கவில்லை ஆனால் அமெரிக்காவின் அணுப் பரிசோதனைகளுக்கு வஞ்சாத வகையில் அவற்றை நடத்தும்படியே கேட்கிறோம் எனத் தெரிவித்தார். அத்துடன் அமெரிக்கா தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த தொடர்ந்தும் அணுப் பரிசோதனைகளை நடத்தும் எனக் கூறியுள்ள திரு டிக் செனி மேலும் இவ்வருடம் நெவாடாப் பாலைவனத்தில் அமெரிக்கா மேற்கொண்ட அணுப் பரிசோதனை பற்றியும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ரஷ்யாவும், பிரான்சும் கடந்தவருடம் முதல் அணுப் பரிசோதனைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க இணக்கம் தெரிவித்து ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதிவரை நீடிக்கின்றது. இந்த ஒப்பந்தத்தை மேலும் நீடிக்கவும், அமெரிக்காவையும் இதில் இணைத்துக் கொள்ளவும் பிரான்ஸ் ஆர்வம் வெளியிட்டது இது குறித்து அமெரிக்கா எந்தக் கருத்தையும் பகிரங்கமாக வெளியிடவில்லை, எனினும் ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு முற்பட்ட ஏவுகணைத் தொழில்நுட்பத்தைத் தடுப்பதற்கு அமெரிக்கா வெளிப்படையாக விரும்புகிறது 250 மில்லியன் டாலர் பெறுமதியுடைய ஏவுகணைத் தொழில் நுட்பம் விற்பனை தொடர்பான ரஷ்ய - இந்திய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் அந் நாடுகளுக்கு வரையறுக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது அத்துடன் பாகிஸ்தான் இரகசியமாக அணு ஆய்வில் ஈடுபடுகிறது என்ற குற்றச்சாட்டின் கீழ் 1990 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானுக்குச் சால பொருளாதார - விஞ்ஞான - தொழில்நுட்ப உதவிகளை நிறுத்திக் கொண்டுள்ளது. அணு ஆயுத அபிவிருத்திப் பணியைக் கைவிட்டால் மட்டுமே பாகிஸ்தானுக்கு மீண்டும் உதவி வழங்கப்படும் என்று அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது.

> கடந்த மே 21ம் திகதி சீனா நடத்திய அணுப்பரிசோதனை அமெரிக்காவிற்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா கடும் ஆட்சேபனை தெரிவித்த இந்த அணுப் பரிசோதனையின் போது ஒரு மெகா தொன் அணு சோதனைக்கு உட்படுத்தப் பட்டது.

அதாவது அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் தானும், தான் அங்கீகரிக்கும் நாடுகளும் மட்டுமே அணு ஆயுத பலத்தையும் தொழில்நுட்பத் திறனையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுவே அமெரிக்காவின் நிலைப்பாடு ஆகும். இதனை அமெரிக்கா வெளிப்படையாகத் தெரிவித்தும் வந்துள்ளது.

அமெரிக்காவின் இந்த இரட்டை நிலைப்பாட்டை நயவஞ்சகமானது என அணு ஆய்வியல் நிபுணர்கள் வர்ணித்துள்ளனர். அமெரிக்கா தொடர்ந்தும் அணுப் பரிசோதனைகளை நடத்தும் அதேசமயம் ஏனைய நாடுகளின் அணுப்பரிசோதனைகளை கண்டிப்பது நயவஞ்சகமானது என்று வாஷிங்டனில் இயங்கும் நட்புரீதியான அணுப் பரிசோதனை இயக்கத்தின் தலைவர் டொம் ஜமோரா தெரிவித்துள்ளமை இதற்கு சான்றாகும். அணு வாயுதப்பரிசோதனை அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும் என்று பகிரங்கமாகக் கூறிவரும் இந்தியா, சீனாவின் மே 21 ஆம் திகதிய அணுப் பரிசோதனை பற்றி எதுவும தெரிவிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆசியாவின் வல்லரசு எனப்படும் சீனாவின் அணுப் பரிசோதனை முயற்சிகள் பற்றி அமெரிக்கா ஏன் அஞ்சுகிறது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

சர்வதேச அரசியல் ஸ்திரப்பாட்டிற்கு சீனாவின் பலம் பெருகுவது அச்சுறுத்தலாக அமையுமென அமெரிக்கா கருதுவதும், சோவியத் யூனியனின் சிதைவிற்குப் பின்னர் ஏற்பட்டிருக்கும் இடைவெளியை சீனா வெற்றிகரமாக நிரவிவிடுமோ என அமெரிக்கா எண்ணுவதும், தனது தலைமையில புதிய உலக ஒழுங்கு ஒன்றைச் சிருஷ்டிக்க முயலும் முயற்சிக்கு சீனா இடையூறாக வந்துவிடும் என நம்புவதும தான் அமெரிக்காவின் அச்சத்திற்குக் காரணம் எனலாம்.

அவ்வாறாயின் சீனா எதிர்காலத்தில கடைப்பிடிக்க எண்ணும் வெளியுறவுக்கொள்கைகளில்தான் உலக அமைதியின் எதிர்காலம் தங்கியுள்ளது என நம்பலாம்.

# ஜேர்மனியில் அகதிகள் அதிகரிப்பு; தடுப்பதற்கு புதிய சட்டம்

[பேர்ன்]

ஜேர்மனியில் இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களிலும் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் வெளிநாட்டவர்கள் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் தஞ்சம் கோரி விண் ... சட்டங்களைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேலும் கடுமையானதாக்கவும், அங்கு தங்கியிருப்பதற்கு குடியேற்ற வாசிகள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை விரைவாகப் பரிசிலனை செய்வதற்கேதுவாக அவர்களைத் தங்கவைக்கப்பெரிய முகாம்களை அமைக்கவும் வகை செய்யும் சட்டம் ... ஜேர்மனிக்குப் பெருமளவில் படையெடுத்திருக்கிறார்கள். இவர்களது அரசியல் தஞ்சக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுத் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் வரை இவர்கள் தங்கியிருப்பதற்கு ஜேர்மனியின் தாராளமயமான அரசியல் தஞ்ச சட்ட விதிகள் இடமளிக்கின்றன.

# டயானா உண்மைக்கதை அரச குடும்பத்தில் சர்ச்சை

[லண்டன்]

முடிக்குரிய இளவரசர் சார்ள்சின் மனைவி டயானா பற்றி அன்ட்ரூ மோர்ட்டன் என்பவர் எழுதியுள்ள நூலொன்றினால் பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் அன்ட்ரூ-சாரா திருமண முறிவு விவகாரத்தில் ஏற்பட்ட சர்ச்சை தணிவதற்கு முன்பாக இவ்விவகாரம் ... நூலில் டயானாவுக்கும், அவரது கணவருக்கும் இடையேயான உறவுகள் குறித்து அதிர்ச்சி தரத்தக்க தகவல்கள் அடங்கியிருப்பதாகச் சூசகமாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது

இம்மாத இறுதியில் வெளிவர இருக்கும் இந் நூலின் மூலம் சார்ள்ஸ் தொடர்பாகவும். அரச குடும்பத் திருமணங்கள் தொடர்பாகவும் ...

பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை இவர்களின் இந்த நடவடிக்கையினம் இன்றுள்ள யதார்த்த நிலையினால் உருவாகியுள்ளது என்றாலும் தப்பில்லை.

இன்றுள்ள யதார்த்த சூழ்நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு அரசியல் அலகாக ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்திலேயே இனப் பிரச்சினையின் தீர்வு குறித்தே லும் பேச்சுவார்த்தை நடத்தக் கூடியதாகவும் அவை ஓர் தீர்வை நோக்கி முன்னேறக் கூடியவையாகவும் இருக்கும் ஆனால் பிரதான சிங்களக்கட்சிகளோ பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஓர் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை. அதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரு அரசியல் அலகாக செயற்படுவதை தாம் எதிர்க்கப் போவதாகவும் பகிரங்கமாக அறிவித்துள்ளன.

இந் நிலையில் சமரசம் செய்து வைக்க முடியாத இரு விடயங்களுக்கு மத்தியில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் எவ்வாறு சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத்திட்டத்தை முன்வைக்க முடியும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும் பெரும்பான்மையினர் சிங்களவராக இருப்பதனால் தீர்வுத்திட்டமும் சிங்களவர் ஏற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு உள்ளதே ஒழிய தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்ப்பதற்கு ஆதாரமும் எதுவுமில்லை.

இந்த யதார்த்த நிலை சிங்கள அரசியல் வாதிகளும் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களும் அறியாதவையல்ல இருப்பினும், அவர்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட்டப்பட வேண்டும் என்பதில் தீவிர அக்கறையாகவுள்ளனர். ஏனெனில் அவர்களின் எதிர்கால அரசியலுடன் இத்தெரிவுக்குழு சம்பந்தப்பட்டுள்ளது.

திரு. பிரேமதாசா அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் முன் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதாக அறிவித்துள்ளது. இதனை அடிக்கடி வற்புறுத்திக் கூறியும் வந்துள்ளது இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முறிவானது இனப்பிரச்சினை குறித்து அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் ஓர் ஸ்தம்பித நிலையை அடைந்து விட்டதான ஓர் நிலையை உருவாக்கியுள்ளது அண்மையில் இக்கேள்வி வெளிப்படையாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கக்கட்சியுடன் ஏற்பட்ட வேறு முரண்பாடுகளை காரணங்காட்டி பாராளுமன்றத் தெரிவுக்குழுவைப் பகிஷ்கரித்தது ஆனால், தற்பொழுது தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியே தடையாகவுள்ளது என்ற அரசாங்கத்தின் குற்றச்சாட்டால் சுதந்திரக்கட்சி தனது பகிஷ்கரிக்கும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய முற்பட்டுள்ளது.

சிங்களக்கட்சிகளின் நிலைப்பாடுகள் இவ்வாறு இருக்க, கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களின் நிலையோ அதைவிடக் கவலைக்கிடமாக உள்ளது. வடக்கு- கிழக்கு இணைப்பிற்கு சாதகமாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானம் இருக்காது எனத் தெரிந்திருந்தும், பாராளுமன்ற தெரிவுக்குழுவைவிட்டால் வேறுவழியில்லை என்ற நிலையில பாராளுமன்றத் தெரிவுக்குழுவை கூட்டவைப்பதில் இக்குழுக்கள் தீவிரமாக உள்ளன. இவர்களுக்கு இக்குழுவைவிட்டால் அரசியற் பற்றுக் கோடேயில்லை.

அதாவது, தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கென உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு அதன் நோக்கத்திற்காக இயங்குவதைவிட சிங்கள அரசியல் கட்சிகளின் செயற்பாட்டிற்காவும், கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களின் அரசியல் அவலத்தைப் போக்குவதற்காகவும் இயங்கவேண்டிய அவசிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் இது சிறிலங்கா அரசியலில் புதிய தொன்றல்ல வட்டமேசை மாநாடு, சர்வகட்சிமாநாடு என்ற வரிசையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் ஒன்று. அடுத்த புதிய வழிமுறையை அரசு தேடும்வரை இப்பாராளுமன்ற தெரிவுக்குழு பேருக்காவது இயங்குவது பலருக்குத் தேவையாகிறது.

---

அணுப் பரிசோதனைகளை நடத்தியிருப்பதாக உலக ஆயுதக் கட்டுப்பாட்டு நிறுவனத் ... வில்லை ஆனால் அமெரிக்காவின் அணுப் பரிசோதனைகளுக்கு அஞ்சாத வகையில் ... கொள்ளவும் பிரான்ஸ் அரசு வம் வெளியிட்டது இது குறித்து அமெரிக்கா எந்தக் கருத் ... ஆய்வியல் நிபுணர்கள் வர்ணித்துள்ளனர். அமெரிக்கா தொடர்ந்தும் அணுப் பரி ... களில்தான் உலக அமைதியின் எதிர்காலம் தங்கியுள்ளது என நம்பலாம்.

---

# ஜேர்மனியில் அகதிகள் அதிகரிப்பு; தடுப்பதற்கு புதிய சட்டம்

[பேர்ன்]

ஜேர்மனியில் இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களிலும் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் வெளிநாட்டவர்கள் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையை விட இது இரண்டு மடங்கு அதிகமானதாகும் என்றும்,

இதே போக்கு தொடருமானால் 1992 இன் இறுதியில் நான்கு இலட்சத்திற்கும் அதிகமான தஞ்சக் கோரிக்கையாளர்கள் ஜேர்மனிக்குள் இருப்பர் என்றும்,

1991 இல் இரண்டு இலட்சத்து அறுபதினாயிரம் வெளிநாட்டவர்கள் ஜெர்மனியில் தஞ்சம் கோரி விண்ணப்பித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனாலேயே ஜேர்மனிக்கு அகதிகள் வருவதைத் தடுப்பதற்காக ஜேர்மனியின் தஞ்ச சட்டங்களைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேலும் கடுமையானதாக்கவும், அங்கு தங்கியிருப்பதற்கு குடியேற்றவாசிகள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை விரைவாகப் பரிசீலனை செய்வதற்கேதுவாக அவர்களைத் தங்கவைக்கப்பெரிய முகாம்களை அமைக்கவும் வகை செய்யும் சட்டம் ஒன்றை ஜேர்மன் பாராளுமன்றம் நிறைவேற்றியது தெரிந்ததே.

ஜேர்மனிக்கு வந்து சேர்ந்து அரசியல் தஞ்சம் கோரும் வெளிநாட்டவர்கள் அகதி முகாம்களில் வைக்கப்பட வேண்டும் என்றும்,

அவர்கள் தொடர்ந்து தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்களா அல்லது வெளியேற்றப்படுவார்களா என்ற விடயம் ஆறு வார காலத்திற்குள்ளாக அவர்களிடம் கூறப்பட வேண்டும் என்றும் இச்சட்டம் கூறுகிறது.

கிழக்கு ஐரோப்பாவையும், மூன்றாம் உலக நாடுகளையும் சேர்ந்த குடியேற்றவாசிகள் ஜேர்மனிக்குப் பெருமளவில் படையெடுத்திருக்கிறார்கள். இவர்களது அரசியல் தஞ்சக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுத் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் வரை இவர்கள் தங்கியிருப்பதற்கு ஜேர்மனியின் தாராளமான அரசியல் தஞ்ச சட்டவிதிகள் இடமளிக்கின்றன.

இந்த வெளிநாட்டு அகதிகளின் 'படையெடுப்பு' ஜேர்மனியின் தீவிர வலதுசாரிக் கட்சிகளின் கடுமையான இனவெறித் தன்மையான எதிர்ப்பைச் சம்பாதித்திருக்கிறது.

இந்த வெளிநாட்டார் படையெடுப்புக் காரணமாக ஆத்திரமடைந்த வலதுசாரிகள் கடந்த வருடம் ஜேர்மனி முழுவதும் அகதி நிலையங்கள் மீது 2 370 தாக்குதல்களை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பனாமாவில் விமான விபத்து; 47 பேர் பலியாகினர்

[பனாமா]

பனாமா நாட்டின் பயணிகள் விமானமொன்று நேற்று முன்தினம் விபத்திற்கு உள்ளாகியதில் நாற்பத்தியேழு பேர் கொல்லப்பட்டுள்ளனர். கிழக்குப் பனாமாவின் மலைப் பகுதியில் இவ்விமானம் விழுந்து நொருங்கியபோது விமானத்தில் பயணம் செய்த ஒருவரும் உயிர் பிழைக்கவில்லை என்று தெரியவருகிறது.

கொலம்பியா நோக்கிச் சென்று கொண்டிருந்த இவ் விமானம் புயலில் சிக்கி மறைந்தமையால் இவ்விபத்து நேரிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

# பாரதீய ஜனதாவிடம் பணிந்து போகிறது காங்கிரஸ் - வி. பி. சிங் குற்றச் சாட்டு

(டில்லி)

ஜனாதிபதி தேர்தல் மன்றத்தல் தனக்குப் போதிய வாக்குகள் இல்லாத காரணத்தினாலேயே இந்திரா காங்கிரஸ் பாரதீய ஜனதாக்கட்சியிடம் பணிந்து போவதாக ஜனதாதள் கட்சியின் தலைவர் வி. பி. சிங் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர் செடியூல்ட் வகுப்பு அல்லது செடியூல்ட் பழங்குடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதி பதவிக்கு தெரிந்தெடுப்பதற்கான வாய்ப்பை ஆளும் கட்சி முறியடிக்க முயற்சி செய்கிறது என்றும் குற்றஞ் சாட்டினார்.

செடியூல்ட் வகுப்பு அல்லது செடியூல்ட் பழங்குடிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு வேட்பாளரை இந்திரா காங்கிரஸ் நிறுத்துமேயானால் தாம் அக் கட்சிக்கு ஆதரவு அளிக்கத் தயார் எனவும் வி. பி. சிங் குறிப்பிட்டுள்ளார்.

# காவிரி நடுவர்மன்ற இடைக்கால உத்தரவு தற்போது அமுலிலாம் - வி. சி. சுக்ளா

[சென்னை]

தமிழகத்திற்கு காவிரி ஆற்றில் இருந்து 205 ரி. எம். சி அளவு தண்ணீர் வழங்க வேண்டுமென்று நடுவர் மன்றம் விடுத்த இடைக்கால ஆணை செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் வி சி. சுக்ளா தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இறுதித் தீர்வை எடடும் வரை இந்த இடைக்காலத் தீர்ப்பு அமுலில் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

மத்திய நீர்வளத்துறை ஆணையில் பல்வேறு இடங்களில் கர்நாடக காவிரி நீரை விடுவிப்பதை கண்காணிக்க தக்க நிபுணர்களை நியமித்துள்ளது என்றும்.

கம்பியூட்டர் மூலம் இந்தக் கண்காணிப்பு நவீன முறையில் மேற்கொள்ளப்படுகிறது என்றும் சுக்ளா தெரிவித்தார்.

கர்நாடக மாநிலமும், தமிழகமும் பேச்சு வார்த்தைகள் மூலம் காவிரிநீர் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்காவிடில் நடுவர் மன்றத் தீர்ப்பே மாற்றுவழி என்று வி. சி. சுக்ளா குறிப்பிட்டார்.

# தேவிலாலுக்கு மாரடைப்பு

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் உதவிப் பிரதமர் தேவிலால் நேற்று முன் தினம் திடீரென மார்பு வலிக்கு இலக்கானார் அதனையடுத்து அவர் யோக்பூர் மாவட்டத்திலுள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டு உள்ளார்.

இதேவேளை காலை விபத்தில சிக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கும், கேரள மாநில முதலவர் கே. கருணாகரன் நேற்று முன்தினம சத்திர சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

# டயானா உண்மைக்கதை அரச குடும்பத்தில் சர்ச்சை

[லண்டன்]

முடிக்குரிய இளவரசர் சார்ல்சின மனைவி டயானா பற்றி அன்ரூ மோர்ட்டன் என்பவர் எழுதியுள்ள நூலொன்றினால் பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் அன்ட்ரூ-சாரா திருமண முறிவு விவகாரத்தில் ஏற்பட்ட சர்ச்சை தணிவதற்கு முன்பாக இவ்விவகாரம் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

டயானா ஹேர் ட்ரூ ஸ்ரோறி என்னும் தலைப்பில் (டயானா அவான் உண்மைக் கதை) மோர்ட்டன் எழுதியுள்ள நூலில் டயானாவுக்கும், அவரது கணவருக்கும் இடையேயான உறவுகள் குறித்து அதிர்ச்சி தரத்தக்க தகவல்கள் அடங்கியிருப்பதாகச் சூசகமாக விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது

இம்மாத இறுதியில் வெளிவர இருக்கும் இந் நூலின் மூலம் சார்ள்ஸ் தொடர்பாகவும். அரச குடும்பத் திருமணங்கள் தொடர்பாகவும் கசப்பான ஒரு பிம்பத்தைத் தோற்றுவிக்க டயானா உதவிவிட்டார் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் விசனம் தெரிவித்துள்ளன.

# பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக பிடல் ராமோஸ் பிரகடனம் செய்வதை தடுக்க சதி?

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் தனக்கே வெற்றி கிடைத்திருப்பதாக உரிமை கோரியிருக்கும் முன்னாள் இராணுவ தளபதி பிடல் ராமோஸ், பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்தியுள்ளார்.

கொலைக்கான இலக்காக தான் இருப்பதாக செய்திகள் வெளியானதையடுத்து இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை எந்தக் குழுவினர் தன்னைத் தாக்கக் கூடும் என்பதை வெளியிட பிடல் ராமோஸ் மறுப்புத் தெரிவித்துள்ள போதிலும் ஜூன் முப்பதாம் திகதியில் ராமோஸ் ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்வதைத் தடுக்கும் முகமாக இராணுவ அதிருப்தியாளர்களும்' கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் மற்றும் வலதுசாரிகள் இணைந்து சதித்திட்டம் தயாரித்து வருவது நம்பப்படக் கூடியதே என்று மணிலா பத்திரிகைகள் கூறியுள்ளன.

# ராஜஸ்தான் வன்முறையில் 13பேர் கொல்லப்பட்டனர்

ராஜஸ்தான் மாநிலத்தில் பரதபூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்த வன்முறைச் சம்பவங்களில் மேலும் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களையும் சேர்த்து அண்மைய கலவரங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை பதின்மூன்றாகியுள்ளது சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இப் பகுதிக்கு மத்திய அரசின் சி. ஆர். பி. எப் படைகளில் மேலும் ஆறு அணிகள் அழைக்கப்பட்டுள்ளன.

# ஈழநாதம்

## மாவீரர்கள் நிழலில் நின்றே தேசியகொடியையேற்றுகிறோம்

### -- அரசண்ணா

இந்த மண்ணில் கால் ஊன்றி நிலைத்து நிற்க வழி வகுத்தவர்கள் இந்த மாவீரர்கள். இவர்களின் நிழலில் நின்று நாங்கள் தேசியக் கொடியை ஏற்றுகின்றோம். காவல்துறை, நீதித்துறையை நடாத்துகிறோம். இதற்கு மாவீரர்கள் பெற்றுத்தந்த பெருமையே காரணம்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தில் நிலையத்தலைவர்திரு.மு. நவநீதன் தலைமையில் லெப். ஆதவன் உட்பட இப்பிரதேச மாவீரர்களின் ஞாபகார்த்த இறுதிப்போட்டி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் காலத்தால் அழியாத சரித்திர வாழ்வைப் பெற்றவர்கள் மாவீரர்கள். இந்த மாவீரர்களின் நினைவுகள் அனைத்தும் எமது மண்ணில் என்றென்றும் நிலைத்து நிற்கும். தமிழீழம் எமது மண்ணில் மலர்ந்தே தீரும். அதன் தலைவராக திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் இருப்பார். அதன் கீழ் நாங்கள் அணிவகுத்திருப்போம் இது உண்மை.

இந்த போரட்டத்தில் தமிழ் மக்கள் முழுமையான டங்களிப்பு செய்யவேண்டும். அப்படி ஒன்று பட்டு செயற்பட்டால் மலர்ந்த தமிழீழத்தை எதிரியால் கருகவைக்க முடியாது. சுதந்திரம் பெறுவது இலேசான காரியம் அல்ல. இருந்த போதிலும் அதனை எதிர்கொள்ள எமது தமிழ் சமுதாயம் தயாராக இருக்க வேண்டும்.

மற்றும் பருத்தித்துறை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் உரை நிகழ்த்தினார்.

நேற்றுமுன்தினம்நடைபெற்ற இறுதிஉதைபந்தாட்டப்போட்டியில்வெற்றிபெற்றவர்களுக்கு மாவீரர்கள் குயிலன், ஆதவன் ஆகியோரின் தந்தையும் நிலையத் தலைவரும் பரிசில்களை வழங்கினார்கள். (82)

## மேலும் பதினேழுபேருக்கு எழுதுவினைஞர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில்அமைய எழுதுவினைஞர்களாக மேலும் 17 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற மேற்படி பதவிக்கான பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 341 பேரது பெயர் விபரங்கள் வெளியாகியதும் அதில் 81 பேருக்கு ஏற்கனவே நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டதும் தெரிந்ததே.

மேலும் 19 இடங்களை நிரப்புவதற்காக நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு 17 பேர் சமூகமளித்திருந்தனர்.

இவர்கள் 17 பேரும் புதன் கிழமைமுதல் தத்தமது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளனர்.

இவர்களில் 11 பேர் சமூக சேவைப் பிரிவிற்கும் 2 பேர் கல்வித் திணைக்களத்திற்கும் கட்டடத் திணைக்களத்திற்கு 2 பேரும் சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு நிலையத்திற்கு 2 பேரும் நியமனம் பெற்றுள்ளனர். (ச)

## வழிபாட்டுத் தலங்களில் மாலை 6மணிக்கு மணி ஓசை

[யாழ்ப்பாணம்]

தமிழ் பகுதிகளின் வழிபாட்டுத்தலங்களைக் குண்டுவீசி அழிப்பதை நிறுத்தக்கோரி சகல வழிபாட்டு நிலையங்களிலும் இன்று மாலை ஐந்து மணிமுதல் ஆறு மணிவரை பிரார்த்தனை நடத்துவதெனவும், அதனைத் தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் ஆலயமணிகள் ஒலிக்குமெனவும் சர்வ சமய சமுதாய ஒன்றியம் முடிவெடுத்துள்ளது.

## பிரார்த்தனை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்தவாரம் அரசின் அராஜகத்திற்குபலியாகியதொழில்நுட்பக்கல்லூரியின் மூன்று மாணவர்களின் ஆத்மசாந்தி அஞ்சலிப்பிரார்த்தனை கூட்டம் ஒன்று யாழ். தொழில்நுட்பக்கல்லூரியின் மண்டபத்தில் நாளைகாலை 10 00மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு இவ் அஞ்சலிக்கூட்டத்தில் அனைத்து விரிவுரையாளர்கள் பகல் பகுதி நேர மாணவ மாணவியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவை அறிவித்துள்ளது. (பா)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

பளவத்தை அ.மி.த.க பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் நாளை பி.ப. 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் தலைமையில்இடம்பெறவுள்ள இப்போட்டியில் பண்டத்தரிப்பு உதவிக் கல்விப்பணிப்பாளர் க. மகேசன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

## தடுப்புக்காவலில் 5865 பேர்

தற்போது 5865 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று மனித உரிமைகள் பேரணிக்குழு தெரிவித்துள்ளது.

## தடுப்புக்காவலில் உள்ளோர் வழக்கு தாக்கல் செய்யலாம்

(கொழும்பு)

தடுப்புக்காவல் முகாம்களில் இருப்பவர்கள் தாம் சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கருதினால் உயர் நீதி மன்றத்தில் முறையீடு செய்யலாம் என்று சிறிலங்கா ஜனாதிபதியின் செயலகம் அறிவித்துள்ளது.

கடிதம் மூலம் இந்த முறையீட்டைச் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு என்றும் செயலகம் தெரிவித்துள்ளது.

## போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

பாடசாலை அதிபர் தரம் I, அதிபர் தரம் II க்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை விசேடமாக வடபகுதிக்கு நடைபெறவுள்ளதாக இலங்கைப்பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## இடம்பெயர்ந்தோருக்கு உடுபுடவைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தீவகமக்கள் நலன்காக்கும் கழகத்தினால் மூளாய் மாவடி இடம் பெயர்ந்தோர் கூடிவாழும் முகாமில் உள்ள மக்களுக்கு நேற்று உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

நலன் விரும்பி ஒருவரினால் கம் அகதிகளுக்கு வழங்கியது. இவ்வாறு அகதிகளுக்கு உதவ முன்வருவோர் இடம்பெயர்ந்த தீவகமக்கள் நலன்காக்கும் கழகத்துடன் தொடர்புகொள்ளலாம். (பா)

## புலிகளுக்கு உதவினால் ஏழு ஆண்டுகள் சிறை

### சென்னை பொலிஸ் ஆணையாளர்

(சென்னை)

தமிழ் நாட்டில் புலிகளுக்கு ஆதரவாக செயல்படுபவர்களுக்கு அதிகபட்சமாக ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என சென்னை பொலிஸ் ஆணையாளர் ராஜகோபாலான் தெரிவித்தர்.

புலிகளுக்கு பண உதவி செய்தாலோ. அல்லது அவர்களுக்கு தங்குவதற்கு இடவசதி அளித்தாலோ அது சட்டப்படி குற்றமாகும். இதனை மீறுபவர்களுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

அதேவேளை புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்து சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டால் ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

புலிகள் இயக்கத்திற்கு வேறு எவ்வகையிலும் உதவுபவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## புலிகளின் மீதான தடை ஆதரவாளர்களை ஒடுக்கவே

### - தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர்

(சென்னை)

தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்குவதில் மாநில அரசாங்கம் வெற்றி கண்டிருக்கின்ற போதிலும், இந்தியாவில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் தேசவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவே அந்த இயக்கத்தின் மீது தடை விதிக்கப்பட்டது என தமிழக சட்டத்துறை அமைச்சர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசிய கிருஷ்ணசாமி இதனைத் தெரிவித்தார். புலிகளின் சார்பில் மாநிலத்தில் தலைமறைவாகி இயங்கும் அமைப்புகளை வேரோடு களைவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## இராமேஸ்வரம் பகுதியில் எஞ்சின் ஒயில் பிடிபட்டது

(சென்னை)

இராமேஸ்வரத்தில் பல்வேறு இடங்களில் இருந்து கடந்த சனிக்கிழமை 1500 லீற்றர் இஞ்சின் ஒயில் கைப்பற்றப்பட்டுள்ளதாக தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு கடத்திச் செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த இந்த எண்ணெயை கடலோரப் பகுதிகளில் ரோந்து மேற்கொண்ட காவல் துறையினர் கைப்பற்றினர் என்றும்,

இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பேரவைக்கோட்ட கடலோர கிராமப்பகுதிகளில் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் செய்யப்பயன்படும் திரிகள் கொண்ட ஒரு பொதியையும் எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சதாம் உசைனிடம் தோல்வி அமெரிக்க அதிபர் புஷ் ஏற்பு

(வாஷிங்டன்)

பயங்கரவாதத்தைகைவிடும்படி சதாம் உசைனைத் தூண்டிய தனது முயற்சிகள் தோல்வி கண்டதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்

அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடந்த செய்தியாளர் மாநாடொன்றில் பேசிய அதிபர் புஷ், குவைத்தை ஈராக் ஆக்கிரமிக்க முன்னர் அந் நாட்டுடன் தான் கொண்டிருந்த தொடர்புகள் அனைத்தும் சரியானதே என்றும் நியாயப்படுத்தினார். அத்துடன் சதாமுடன் காரியமாற்ற நாம் முயற்சித்தோம். ஆனால் அந்த அணுகுமுறையால் பலன் எதுவும் ஏற்படவில்லை எனவும் விபரித்தார்.

மேலும் நாம் என்ன செய்தோம் என்பதை நாம் அறிவோம். அதில் சட்ட விரோதமானது எதுவுமில்லை எனவும் குறிப்பிட்டார்.

---

### தொண்டர்

சென்று பல அமைச்சர்கள், அதிகாரிகள், தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபின்பே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

### தெல்லிப்பழை

நிற்குமாறு பொதுமக்களுக்கு இராணுவம் திரும்பத் திரும்ப கூறியிருப்பதாகவும், இந்து ஆலயங்களில் அடைக்கலம்பெறுமாறு பொதுமக்களை எச்சரிக்கும் துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டதாகவும் கேணல் முனசிங்கா தெரிவித்தார்.

---

### 100 முஸ்லிம்

அவர் தெரிவித்தார்:

இவர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்க திருமலை வைத்திய சாலையிலிருந்து வைத்திய அதிகாரிகளை அழைத்துச் செல்ல இருப்பதாகவும்,

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு மாதத்திற்கு தேவையான அரிசி நிவாரணமாக வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

---

## சூழ்நிலை சாதகமானால் ஜம்மு - காஷ்மீரில் தேர்தல்

இனிப்பு

மக்கள் முழுமையான டங்களி

சமூகமளித்திருந்தனர்.

## வழிபாட்டுத் தலங்களில் மாலை 6மணிக்கு மணி ஓசை

[யாழ்ப்பாணம்]

தமிழ் பகுதிகளின் வழிபாட்டுத்தலங்களைக் குண்டுவீசி அழிப்பதை நிறுத்தக்கோரி சகல வழிபாட்டு நிலையங்களிலும் இன்று மாலை ஐந்து மணிமுதல் ஆறு மணிவரை பிரார்த்தனை நடத்துவதெனவும், அதனைத் தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் ஆலயமணிகள் ஒலிக்குமெனவும் சர்வ சமய சமுதாய ஒன்றியம் முடிவெடுத்துள்ளது.

(கொழும்பு)

தடுப்புக்காவல் முகாம்களில் இருப்பவர்கள் தாம் சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கருதினால் உயர் நீதி மன்றத்தில் முறையீடு செய்யலாம் என்று சிறிலங்கா ஜனாதிபதியின் செயலகம் அறிவித்துள்ளது.

கடிதம் மூலம் இந்த முறையீட்டைச் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு என்றும் செயலகம் தெரிவித்துள்ளது.

## போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

பாடசாலை அதிபர் தரம் I, அதிபர் தரம் II க்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை விசேடமாக வடபகுதிக்கு நடைபெறவுள்ளதாக இலங்கைப்பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடந்த செய்தியாளர் மாநாடொன்றில் பேசிய அதிபர் புஷ், குவைத்தை ஈராக் ஆக்கிரமிக்க முன்னர் அந்நாட்டுடன் தான் கொண்டிருந்த தொடர்புகள் அனைத்தும் சரியானதே என்றும் நியாயப்படுத்தினார். அத்துடன்

வோம். அதில் சட்ட விரோதமானது எதுவுமில்லை எனவும் குறிப்பிட்டார்.

### தொண்டர்

சென்று பல அமைச்சர்கள், அதிகாரிகள், தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபின்பே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### தெல்லிப்பழை

நிற்குமாறு பொதுமக்களுக்கு இராணுவம் திரும்பத் திரும்ப கூறியிருப்பதாகவும், இந்து ஆலயங்களில் அடைக்கலம்பெறுமாறு பொதுமக்களை எச்சரிக்கும் துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டதாகவும் கேணல் முனசிங்கா தெரிவித்தார்.

செய்யப்பயன்படும் நிரக்கின் கொண்ட ஒரு பொதியையும் எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 100 முஸ்லிம்

அவர் தெரிவித்தார்:

இவர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்க திருமலை வைத்திய சாலையிலிருந்து வைத்திய அதிகாரிகளை அழைத்துச் செல்ல இருப்பதாகவும்,

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு மாதத்திற்கு தேவையான அரிசி நிவாரணமாக வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

## இடம்பெயர்ந்தோருக்கு உடுபுடவைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தீவகமக்கள் நலன்காக்கும் கழகத்தினால் மூளாய் மாவடி இடம் பெயர்ந்தோர் கூடிவாழும் முகாமில் உள்ள மக்களுக்கு நேற்று உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

நலன் விரும்பி ஒருவரினால் அகதிகளுக்கு வழங்கும் படி அன்பளிப்பாக வழங்கிய உடுபுடவைகளையே மேற்படி கழகம் அகதிகளுக்கு வழங்கியது.

இவ்வாறு அகதிகளுக்கு உதவ முன்வருவோர் இடம்பெயர்ந்த தீவகமக்கள் நலன்காக்கும் கழகத்துடன் தொடர்புகொள்ளலாம். (பா)

# சூழ்நிலை சாதகமானால் ஜம்மு - காஷ்மீரில் தேர்தல்

## - நரசிம்மராவ்

[டில்லி]

சூழ்நிலைகள் சாதகமாக அமைந்தவுடனேயே ஜம்மு காஷ்மீரில் பிரதிநிதித்துவ அரசு மீண்டும் அமைக்கப்படுவதனை தாம் ஆதரிப்பதாக இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் பிரச்சினைகளுக்கான எந்த ஒரு தீர்வும் அரசியல் சாசன கட்டமைப்புக்கள் கண்டறியப்பட வேண்டும் என்றார். அத்துடன் அரசியல் சாசன 370 வது பிரிவை நீக்க வேண்டும் எனச் சிலர் விடுத்த கோரிக்கையையும் நிராகரித்தார்.

ஜம்மு காஷ்மீரில் நடைபெறும் பயங்கரவாதப் பிரச்சினைகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து எரியூட்டி வருவதற்கு பிரதமர் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததுடன் ரியோவில் பாகிஸ்தான் பிரதமர் வாப்ஷரீப்பை தாம் சந்திக்கும் போது இது குறித்து விவாதிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

பஞ்சாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குஅரசு பல தொடர் திட்டங்களை கொண்டு வரும் எனவும் குறிப்பிட்டார்.

பொருளாதார திட்டங்களிலும், பொருளாதார சீர்திருத்தங்களின் வேகத்தை குறைக்கும் திட்டமும் தமது அரசுக்கு இல்லை எனவும் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான பொதுக்கருத்தொன்றைக் காணும் பணியில் தாம் இறங்கியிருப்பதாகவும் அதில் பிரச்சினைகள் ஏற்படாது என நம்புவதாகவும் திரு.ராவ் கூறினார்.

பங்குச் சந்தை முறைகேட்டில் குற்றவாளிகள் என்று கண்டு பிடிக்கப்படுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் எதையும் மூடிமறைக்கவோ அல்லது எவரையும் காப்பாற்றவோ முயற்சிகள் செய்யப்படமாட்டாது மத்திய புலனாய்வு நிறுவனம் இது தொடர்பான விசாரணைகளை தொடர்ந்து நடாத்தி வருகிறது என்றும் தெரிவித்தார்.

அண்மையில் பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்தை அமுல் படுத்துவதற்கான விதிமுறைகள் வரையப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கடற்படை

கடற்படையினரின் தாக்குதலில் இருந்து தப்பி நீந்திக் குருநகர் வந்து சேர்ந்தவர்களில் ஒருவரான அல்போன்ஸ் மோகன் (வயது 21) இவ்வாறு கூறினார்

இவர்களுடன் தொழிலுக்குச் சென்ற யேசுதாசன் (வயது 21) என்னும் இளம் குடும்பஸ்தர் சம்பவத்தில் பலியானார்

மோகன் மேலும் கூறுகையில்:

''வெளிச்சம் பரவியதைத் தொடர்ந்து கடற்படையினர் பரவலாகச் சுட்டனர். வள்ளத்தில் நின்ற யேசுதாசன் சூடுபட்டுக் கடலில் வீழ்கையில்என்னால் 'ஐயோ என்னால் ஏலாது' எனச் சொன்னது மட்டும் காதில் விழுந்தது.

விலகிச் சென்று மற்றொரு படகில் தாக்குதலை நடத்திய கடற்படையினர் மீண்டும் எமது வள்ளம் கிடந்த இடத்திற்கு வந்து சுட்டுக்கொண்டிருந்தனர். நாம் தொலைவில் கடலில் மூழ்கியும், எழுந்தும் வந்து கொண்டிருந்தோம். எம்மைத் தேடித்தேடிக் கடலில் பரவலாக கடற்படையினர் சுட்டுக்கொண்டிருந்தனர்.'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இவர்கள் சென்ற வள்ளமும், கடற்தொழில் உபகரணங்களும் கடற்படையினரால் சேதமாக்கப்பட்டன. (21)

### வீரச்சாவு

### லெப். தமிழன்

யில் எதிர்பாராத விதமாக இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் லெப்டினன்ட் தமிழன் [பீற்றர் - கேதீஸ்வரன் மகேஸ்வரன், துணைவி, வட்டுக்கோட்டை] வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

01-06-92 அன்று அலம்பில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் 2-ம் லெப்டினன்ட் அறிவொளி [சுஜன் - கதிரவேலு விக்னேஸ்வரன், கோயில்குளம், முதலாம் ஒழுங்கை, வவுனியா, கொக்குதொடுவாய், முல்லைத்தீவு] வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### பல்கலைக்

மூலம் கூடுதல் மாணவர்களுக்கு உயர்கல்வி அளிக்கப்படுமெனவும் இத்திட்டத்தின்படி நாடு பூராகவும் 8000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் வழமையினைவிட 20 வீதம் கூடுதல் மாணவர்களுக்கு அனுதியளிக்கப்பட்டமையும் இதன் மூலம் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் மாணவர் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது தெரிந்ததே. (05)

### வீரச்சாவு

வீரவேங்கை செல்வகுமார் [கந்தசாமி சுந்தரலிங்கம், நெடுங்கேணி வீதி, ஒட்டிசுட்டான்] ஆகியோருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### இனிப்பு

இவ் வைபவத்தின் போது தமிழ்க் குழந்தைகளுக்கு வழங்க என இனிப்பு பார்சல் ஒன்றை ராஜமனோகரி புலேந்திரன், ஹேமாபிரேமதாசவிடம் வழங்கினார். அதனைப் பெற்றுக்கொண்டஅவர் அப்பார்சலை குழந்தைகளை நோக்கி வீசியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நடவடிக்கை அவரின் ஆணவமா? அல்லது இனத்துவேசமா என கேள்வியெழுப்பிய பொதுமக்கள் சிலர் அவ்விடத்தை விட்டு சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வீரமுனை

கொட்டில்களில் 150 தமிழ்க் குடும்பங்கள் சிறிலங்கா அரச படைகளினால் பலாத்காரமாக குடியமர்த்தப்பட்டிருந்தனர். இந்த குடியமர்த்தல் நடவடிக்கைகளின் போது அங்கிருந்த பாடசாலை ஒரு முகாமாக்கப்பட்டது.

அங்கு குடியிருந்த தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினராலும் முஸ்லிம்களாலும் தொடர்ச்சியான பயமுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டனர். அங்குள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க இராணுவத்தினர் மறுத்து வந்தனர். இவ்வாறு வீரமுனைத் தமிழர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த அழுத்தங்களினாலும் துன்புறுத்தல்களினாலும் 150 தமிழ்க் குடும்பங்களும் இரவோடு இரவாக மீண்டும் தாம் தங்கியிருந்த இடங்களுக்குச் சென்று விட்டனர்.

இவர்களில் 100 குடும்பங்களை இராணுவத்தினர் பலாத்காரமாக கொண்டுசென்று வீரமுனையில் குடியமர்த்தியுள்ளனர்.

## வாகன வரிசை இலக்கம் 08. 06. 1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம் — 4253

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம் — 3325

இராணுவம் அனுமதித்த இறுதி வாகனவரிசை இலக்கம் — 3308

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கங்கள்:- 42-1059, 41-9167, 24-7623, 42-526, 40-2249, 28-3589, 26-4041, 27-4019, 27-5633, 26-1672, 28-9927, 24-5529, 24-4464, 27-9771, 40-1655, 28-6488 26-3130, 27-9329, 26-1745, 28-9449, 36-4505, 25-8105, 25-3240, 25-6319, 36-380, 25-7969, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - 29 வாகனங்கள்.

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்.

தனியார்:- 26-3321, 42-2862, 26-502, 40-5216, 27-9707, 42-2355, 41 6893, 26-3632, 27-1836, 25-4342 28-921, 26-2108, 28-940, 41-8617, 27-7419, 24-6944, 26-6077, 36-8307 25-7930.

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனவரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை, தலைமையகம்

ஓட்டுனர்

பத்து வருடங்கள் கனவாகன ஓட்டி அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் மேற்படி பதவிக்கு தமது விண்ணப்பங்களை 16-06-92 க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 18-06-92 முற்பகல் 10. 00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
08-06-92.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

(சி-4524)


## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு காந்திமதி

திருமதி முருகேசு காந்திமதி அவர்கள் சென்ற 5-6-92 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், ராதாமோகன் [மோகன் பிரான்ஸ்], சாந்தரூபன் [லாதா பிரான்ஸ்], மதனரூபன் [சுதா பிரான்ஸ்], ராதிகா [அனிதா], சுதந்திரரூபன் [சந்துரு, மாணவன் யூனியன் கல்லூரி] ஆகியோரின் அன்புத்தாயாரும், பென்ரஞ்சனி [பிரான்ஸ்] ஸ்ரீலதிகா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும் நிருஜன், நிருபன், ஸ்ரெபான், கிரெஃபி ஆகியோரின் அன்புப்பாட்டியுமாவார் இவரது ஈமக்கிரியைகள் 6-6-92 சனிக்கிழமை சுன்னாகம் ஜெகதரபவனம் இல்லத்தில் நடைபெற்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்
ராதிகா (அனிதா) மகள்

திருமதி N. பொன்னுத்துரை
ஜெகதர பவனம்
சுன்னாகம் கிழக்கு
சுன்னாகம்.

(2646)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது